Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 103 | thalaivaasaltv@gmail.com | புதன்கிழமை | ஜனவரி 20, 2021

## காங்கேசன் கடற்கரையில் இந்திய மீனவர்களின் சடலங்கள் மீட்பு!

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவப் படகு ஒன்று நெடுந்தீவு கடற்பரப்பில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் உயிரிழந்த மீனவர்கள் இருவரின்
03



# இடித்தழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை மீளமைக்கும் பணி ஆரம்பம்

## பல்கலை மாணவர்கள் மும்முரம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள முள்ளிவாய்கால் நினைவுத் தூபிக்கான அத்திவாரம் வெட்டும் பணிகள் இன்று பல்கலைக் கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
03

# வடக்கு, கிழக்கு மக்களை வறுமையில் வைத்து அடக்குமுறையை கையாளவே அரசாங்கம் முனைகிறது!



30 ஆண்டுகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் முன்னெடுக்காது அவர்களை வறுமைக் கோட்டின் கீழ் வைத்திருக்கவும், அடக்கு முறையை கையாளவுமே முயற்சிப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இன்று உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

குருந்தூர் மலை பிரதேச இடத்தை தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமித்து வருகின்றது, எனினும் 1933 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் இது தமிழர் பகுத்து என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பரம்பரை பரம்பரையாக தமிழர்கள் இந்த இடத்தில் மத வழிபாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.
03

## கொரோனாவால் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக இடமளிக்க இயலாது!



கொரோனா தொற்றினால் மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்க இடமளிக்க முடியாது என்றும் அடிப்படை வசதிகளற்ற பாடசாலைகள் குறித்து விடேச கவனம் செலுத்தப் பட்டுள்ளதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
03

## வடக்கில் 20 நாட்களில் 300இற்கு மேற்பட்டோருக்கு கொரோனா

வடக்கு மாகாணத்தில் கடந்த ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நேற்றுவரையான காலப்பகுதியில் 351 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழில் அவரது அலுவலகத்தில் இன்று (புதன்கிழமை) நடத்தப் பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
03

## டிரம்பின் அடுத்த திட்டம் கசிந்தது



அமெரிக்காவில் ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் தோல்வி அடைந்த டிரம்ப், புதிய கட்சி தொடங்கப்போவதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவில் நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தோல்வியை தழுவியதும் டொனால்ட் டிரம்ப் முன்வைத்த மோசடி குற்றச்சாட்டுக்கு அவரது கட்சியான குடியரசு கட்சியை சேர்ந்த பலரும் ஆதரவு தெரிவிக்க வில்லை.
03

## மன்னாரில் இன்று 18 பேருக்கு கொரோனா

மன்னார் மாவட்டத்தில் 18 பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை இன்று புதன்கிழமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் மன்னார் வைத்திய சாலையைச் சேர்ந்த 2 தாதியர்களும் 2 ஊழியர்களும் அடங்குகின்றனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மாதிரிகள் பெறப்பட்ட 3 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் தொற்று உள்ளமை
03



## ரஞ்சன் விடுதலையாவதற்கு ஒரே வழி ஜனாதிபதி பொதுமன்னிப்பே

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க விடுதலை யாவதற்கு ஒரே மாற்றுவழி ஜனாதிபதி பொது மன்னிப்பாகும்
03




**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# குருந்தூர் மலை தமிழர்களுக்கு சொந்தமானது



குருந்தூர் மலையில் முன்னெடுக்கப்பட்ட எல்லை மீள்நிர்ணய நடவடிக்கை ஊடாகத் தயாரிக்கப்பட்ட வரைபடத்தை, உடன் இரத்துச் செய்ய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'தமிழர்களின் நிலங்கள் மோசமாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. மக்கள் கொதித்தெழுந்துள்ளனர்.

ஆகையால், இதற்கு அவசரமான தீர்வு வேண்டும். மண்டைதீவு பகுதியில் இடம்பெற்ற காணி சுவீகரிப்பு நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தினோம். இருப்பினும், இந்த வாரம் முழுவதும் நில அளவை செய்யப்படவுள்ளது.

அதேபோல், குருந்தூர் பகுதிக்கு அண்மையில் சென்றோம். இதன்போது, அங்குள்ள காட்டு மரங்கள் வெட்டப்பட்டு, பாதைகள் செப்பனிடப்பட்டுக் கொண்டு இருந்தன.

அத்துடன், நூல்களால் எல்லையிடப்பட்டும் இருந்தது. அத்துடன், கட்டுமானத்துக்கான அத்திபாரமும் வெட்டப்பட்டிருந்தது. இதைக் கேட்டபோது, தொல்லியல் இடம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதி தமிழர்களுக்குச் சொந்தமானது. 2018ஆம் ஆண்டில், தமிழர்கள் இங்கு வழிபடத் தடையில்லை என முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், இங்கு வழிபட அனுமதி மறுக்கப்பட்டு, இந்தப் பகுதியை புத்தமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு டிசெம்பர் மாதம், இந்தப் பகுதியில் நிலஅளவை முன்னெடுக்கப்பட்டு, எல்லை மீள் நிர்ணயம் செய்யப்பட்டு, வரைபடமொன்று தயாரிக்கப்பட்டது.

இந்த நிலஅளவைப் பணி, முல்லைத்தீவு மாவட்ட நிலஅளவை அதிகாரிகளால் முன்னெடுக்காது, கொழும்பில் இருந்து வந்த அதிகாரியால் முன்னெடுக்கப்பட்டது.

அந்த நிலஅளவை அடிப்படையிலேயே, வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில், அந்த இடம் குருந்தி விகாரைக்குச் சொந்தமானது என அவ்வதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இந்த வரைபடம் உடனடியாக இரத்துச்செய்யப்பட்டு, இது தொடர்பில் விசாரணை முன்னெடுக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# விமான நிலையங்கள் நாளை முதல் திறப்பு






விமான நிலையங்கள் நாளை (வியாழக் கிழமை) முதல் மீண்டும் சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்படவுள்ளன என சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.


கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த வருடம் மார்ச் மாதம் 19 ஆம் திகதி சுற்றுலா பயணிகளின் வருகைக்கு தற்காலிகமாக தடைவிதிக்கப்பட்டது.

எனினும் முதற்கட்டமாக அண்மைய சில நாட்களாக உக்ரைனில் இருந்து சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைவதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் நாளை முதல் சுற்றுலாப் பயணிகளுக்கான சட்டத்திட்டங்கள் தளர்த்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாட்டுக்கு பிரவேசிப்பதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் சுற்றுலா பயணிகள் பி.சீ.ஆர் பரிசோதனை மேற்கொள்வது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# மினுவாங்கொட - பேலியகொட கொரோனா கொத்தணி: 50 ஆயிரத்தைக் கடந்தது



நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் 669 புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் 660 பேர் மினுவாங்கொட - பேலியகொட கொரோனா கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்கள் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, மினுவாங்கொட - பேலியகொட கொரோனா கொத்தணிப் பரவலில் இனங் காணப்பட்ட மொத்த கொரோனா நோயாளர்களது எண்ணிக்கை 50 ஆயிரத்தைக் கடந்து 50 ஆயிரத்து 561 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், நாட்டில் பதிவாகியுள்ள மொத்த கொரோனா நோயாளர்களது எண்ணிக்கை 54 ஆயிரத்து 419 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை கொவிட் தொற்றுக்கு உள்ளாகி குணமடைந்தோரின் எண்ணிக்கையும் 46 ஆயிரத்து 594 ஆக உயர்வடைந்துள்ளது.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றினால் மேலும் மூன்று பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கையும் 273 பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவில் ஐம்பொன் புத்தர் சிலையை விற்பனை செய்ய முயன்ற மூவர் கைது



முல்லைத்தீவில் ஐம்பொன் புத்தர் சிலையை விற்பனை செய்ய முயன்ற ஹற்றனைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது ஆறு கிலோ நிறையுடைய ஐம்பொன் புத்தர் சிலையை சிறப்பு அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தம்மிகவின் பாணியை அரசாங்கம் ஊக்குவிக்கவில்லை



தம்மிகவின் பாணியை அரசாங்கம் ஊக்குவிக்கவில்லை என அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், "தம்மிக பாணி குறித்து கடந்த காலங்களில் அதிகம் பேசப்பட்டன.

மருத்துவ ரீதியான பரிசோதனைக்காக 2 வாரங்கள் அனுமதி கிடைத்துள்ளது. இந் நிலையில், இதுவரை அரசாங்கம் அது தொடர்பில் எவ்வித கருத்துகளையும் முன்வைக்கவில்லை.

கொரோனா வைரஸ் தடுப்பூசி தொடர்பிலும் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. தடுப்பூசிகளைப் போட்டுக்கொண்டவர்களில் சிலரும் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கி உள்ளனர். எனவே, இந்த வைரஸைக் குணப்படுத்துவதற்கான தெளிவான சான்றுகள் எங்கும் இல்லை.

அதாவது, நீங்கள் தடுப்பூசி போட்டாலும் அப்படித்தான். அதற்கமையப் பார்த்தால், இந்தப் பாணி சிறந்தது. இந்தப் பாணி குறித்த மேலும் பல தகவல்களைத் தேட வேண்டும். அரசாங்கம் இதை ஊக்குவிக்கின்றது என நான் நினைக்கவில்லை.

எந்தவொரு நபரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கலாம். எது எவ்வாறாயினும், அரசாங்கம் இதைப் பயன்படுத்துமாறு, இதுவரை உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை." எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஔடத பாணியை தான் கூறியவாறு பயன்படுத்தவில்லையாம்!



கொரோனாவுக்கு எதிரான ஔடத பாணியை தாம் கூறியவாறு பருகியிருந்தால், ஒருவருக்கும் கொரோனா தொற்று ஏற்படாது என கேகாலையைச் சேர்ந்த தம்மிக்க பண்டார தெரிவித்துள்ளார்.

கேகாலையைச் சேர்ந்த தம்மிக்க பண்டார என்பவரினால் கொரோனா வைரஸுக்கு எதிராக தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் ஔடத பாணியை பருகிய சில பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

குறிப்பாக தம்மிக்க பண்டார கூறியவாறு, அனைத்து முறைகளையும் பின்பற்றி பாணியை பருகிய தாம் உள்ளிட்ட தமது குடும்பத்தைச் சேர்ந்த அனைவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக கேகாலை பிரதேச சபையின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதியான சிலந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாக ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே, தாம் கூறியவாறு ஔடத பாணியைப் பருகியிருந்தால் கொரோனா ஏற்பட்டிருக்காது என தம்மிக்க பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மருத்துவர் அல்லாத ஒருவர் இவ்வாறான கருத்துக்களை வெளியிடும்போது பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அரச ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கம் கருத்து தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வடமராட்சி கடற்பரப்புள் நுழைந்து இந்திய மீனவர்கள் அட்டகாசம்

வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறி தொழில் ஈடுபட்டுள்ள இந்திய மீனவர்கள் பருத்தித்துறை மீனவரின் வலைகளை அறுத்து அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

"பருத்தித்துறை சுப்பர்மடம் இறங்கு துறையிலிருந்து 15 கிலோ மீற்றர் தொலைவில் தொழிலுக்காக இன்று அதிகாலை படகில் சென்றேன். அங்கு இந்திய மீனவர்களின் 4 படகுகள் தொழிலில் ஈடுபட்டிருந்ததுடன், எனது 20 வலைகளை அவர்கள் அறுத்து எடுத்திருந்தனர்.

வலைகளைத் தருமாறு கேட்டேன். இந்திய மீனவர்கள் கற்களால் எனது படகை நோக்கி எறிந்தனர். தமக்கு அருகே வந்தால் தாக்குதல் நடத்துவோம் என்று இந்திய மீனவர்கள் மிரட்டினார்கள். அவர்கள் முகத்தை தெரியாதவாறு துணி கட்டியிருந்ததுடன், கொட்டன்களை வைத்திருந்தனர்.

பல மணிநேரம் வலைகளைக் கேட்டு காத்திருந்துவிட்டு, ஏமாற்றத்துடன் கரை திரும்பியுள்ளேன்.

சுமார் 3 லட்சம் ரூபாய் வலைகளை இழந்துள்ளேன்" என்று பாதிக்கப்பட்ட மீனவரான சுப்பர்மடம் மீனவர் சங்கத் தலைவர் தே.தேவதாசன் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மீனவர், பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ரஞ்சன்...

என ஆளுங்கட்சி உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

மேலும் அதனை பெற்றுக்கொள்ளவே எதிர்க்கட்சி முயற்சிக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஆனால் ரஞ்சனுக்காக செயற்படுவதாக தெரிவித்துக் கொண்டு அடுத்த நாடாளுமன்ற தேர்தலிலும் அவர் போட்டியிடுவதை தடுப்பதற்கே சிலர் முயற்சிக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் ரஞ்சனுக்கு வழங்கப்பட்டிருக்கும் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்கான தீர்ப்பு, ஐக்கியத் தேசியக் கட்சி அரசாங்க காலத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் தொடர்பாக ரஞ்சன் உட்பட எதிர்க்கட்சியினருக்கு நல்ல அபிப்ராயம் இருக்கின்றது என்றும் அதனால் நீதிபதிகள் ஒரு தலைப்பட்சமாக தீர்ப்பு வழங்கியதாக தெரிவிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் ரஞ்சனுக்கு தற்போது உயர்நீதிமன்றமே தீர்ப்பளித்து சிறைத்தண்டனை வழங்கி இருக்கின்றது எனவும் நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை காலத்துக்கு பின்னரே வெளியில் வரமுடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு இல்லாவிட்டால் இருக்கும் ஒரே மாற்றுவழி ஜனாதிபதி பொது மன்னிப்பை பெற்றுக்கொள்வதாகும். அதனால் ரஞ்சன் ராமநாயக்கவை நாடாளுமன்றத்துக்கு அழைத்துவரவேண்டும் என தெரிவிக்கும் எதிர்க்கட்சியினர், உண்மையாகவே அவருக்காக செயற்படுவதாக இருந்தால், அவருக்கு பொது மன்னிப்பை பெற்றுக்கொடுக்க முயற்சிக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

### மன்னாரில்...

உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிகாட்டினார்.

மேலும் கோரோனா தொற்றாளர்களுடன் நேரடித் தொடர்பு வைத்திருந்தனர் என்ற அடிப்படையில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த 11 பேருக்கும் கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை இன்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலை மருத்துவ விடுதியில் கோவிட் -19 நோயாளிகள் இருவர் கடந்த வாரம் அடையாளம் காணப்பட்ட நிலையில் அந்த விடுதியில் பணியாற்றிய மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், நோயாளிகள் என சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் தாதிய உத்தியோகத்தர் ஒருவரும் கோரோனா தொற்றுக்கு உள்ளாகியமை கண்டறிப்பட்டது.

தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் அடிப்படையில் தாதிய உத்தியோகத்தர்கள் இருவரும் சுகாதார ஊழியர்கள் இருவரும் என நால்வர் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்கள் நால்வருக்கும் தொற்று உள்ளமை இன்று உறுதிப்படுத்தபட்டுள்ளது.

### இடித்தழிக்கப்பட்ட...

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி கடந்த 8 ஆம் திகதி இரவு பல்கலைக்கழக நிருவாகத்தினால் இடித்து அழிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து தொடர் எதிர்ப்பு போராட்டத்தை முன்டுத்திருந்தனர்.

பின்னர் சில மாணவர்களால் போராட்டம் உணவு தவிர்ப்பு போராட்டமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மாணவர்களின் போராட்டத்திற்கு உலகின் பல இடங்களில் இருந்தும் ஆதரவு பெருகியதால் கடந்த 11 ஆம் திகதி, தூபி இடித்து அழிக்கப்பட்ட அதே இடத்தில் மீண்டும் தூபி அமைப்பதற்கு மாணவர்களின் பங்குபற்றலோடு துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசாவினால் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து இடித்து அழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி, அனைவருடைய பங்களிப்புடனும் மீண்டு அமைப்பதற்கு நிதி உதவியினை வழங்குமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்றையதினம் கோரிக்கை விடுத்திருந்தது.

அதற்கமைய இன்றையதினம் நூபி அமைப்பதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.க

### காங்கேசன்...

சடலம் மீட்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு கடற்படையினரால் இந்த தகவல் இன்று புதன்கிழமை மாலை அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை கடற்பரப்பில் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

நேற்று நெடுந்தீவு கடலில் மூழ்கிய மீனவப் படகிலிருந்த மீனவர்களுடைய சடலமே அவை என கடற்படையினரால் நம்பப்படுகிறது.

நேற்றுமுன்தினம் (ஜன. 18) பின்னிரவில் நெடுந்தீவிலிருந்து சுமார் 8 கடல் மைல் தொலைவில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்தியாவிலிருந்து இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் படகுகள் வருகைத் தந்தன.

இவ்வாறு இலங்கை கடற்பரப்பிற்குள் சட்ட விரோதமான முறையில் வருகைத் தந்த படகுகளையும், மீனவர்களையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, இலங்கை கடற்படையிடமிருந்து தப்பிக்கும் நோக்குடன், இந்திய மீனவர்கள் தமது படகுகளை செலுத்த முயற்சித்தன.

தப்பிச் செல்ல முயற்சித்த வேளையில், குறித்த இந்திய மீனவர் படகு ஒன்று கடலில் கவிழ்ந்தது.

கடற்படையின் சூழியோடிகள் குழு, கடற்படை படகுகள் மற்றும் கப்பல்கள் இணைந்து படகில் பயணித்த மீனவர்களை தேடும் நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

இந்த நிலையில் இந்திய மீனவர்கள் இருவரது சடலங்கள் காங்கேசன்துறை கடற்பரப்பில் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

### வடக்கு, கிழக்கு...

எனினும் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்த பகுதியை இராணுவம் சுற்றிவளைத்து ஆக்கிரமித்துள்ளது.

இதனால் தைபொங்கல் தினத்தில் எமது தமிழர்கள் அங்கு செல்ல முடியாத நிலைமை உருவாகியது. கேட்டால் தொல்பொருள் திணைக்களம் இந்த இடத்தில் ஆய்வுகளை செய்வதாக கூறியுள்ளனர்.

2018 ஆம் ஆண்டில் இந்த இடத்தில் பௌத்த தேரர் ஒருவர் புத்தர் சிலை ஒன்றினை வைத்து பௌத்த விகாரையை அமைக்க முயற்சித்தார். பின்னர் நீதிமன்றம் இதற்கு இடைக்கால தடை விதித்து அவர்களின் நடவடிக்கைகளை தடுத்தனர்.

எனினும் மீண்டும் இதே இடத்தில் தொல்பொருள் திணைக்களம் ஆய்வுகளை மேற்கொள்வதாக கூறி விகாரை ஒன்றினை அமைக்கும் முயற்சிகளை எடுத்துள்ளனர்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் இன்னமும் பொருளாதார நிலைமையில் வறுமைக்கோட்டின் கீழ் நிலையிலேயே வாழ்கின்றனர். ஏனைய மாவட்டங்களில் மக்களுடன் போட்டிபோடக்கூடிய நிலைமையில் வடக்கு கிழக்கு மக்களின் வாழ்க்கைத்தரம் இல்லை.

எனவே எமது மக்களை இலக்கு வைத்து நடத்தும் அடக்குமுறையை நிறுத்த வேண்டும் என்றார்.

### கொரோனாவால்...

ஹோமாகம-மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியின் 10ஆவது வருட நிறைவு விழா நிகழ்வில் காணொளி ஊடாக கலந்துக் கொண்டு கருத்து தெரிவித்த அவர், இலவச கல்வி சேவையினை மேம்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள பாடசாலைகள் அனைத்தையும் தரமுயர்த்துவது அரசாங்கத்தின் பிரதான நோக்கம் என குறிப்பிட்ட பிரதமர் தற்போது கல்வித் துறையை மேம்படுத்த உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும், பாடசாலைகளில் சுகாதார பாதுகாப்பு தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் மாணவர்களை பாதுகாப்பான முறையில் பாடசாலைக்கு அனுப்பி வைக்க வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு உண்டு என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்

### டிரம்பின்...

அத்துடன், டிரம்பின் செயல்களை விமர்சித்தனர்.

இதற்கிடையே, ஜனவரி 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் டிரம்ப் பேச்சால் அவருடைய ஆதரவாளர்கள் கலவரத்தில் ஈடுபட்ட விவகாரம் சொந்த கட்சியினரின் அதிருப்தியை மேலும் அதிகரிக்கச் செய்தது.

கலவரத்திற்கு டிரம்ப் பொறுப்பு ஏற்க வேண்டும் என குடியரசு கட்சியை சேர்ந்த மெக்கனல் விமர்சனம் செய்தார். இதுபோன்ற காரணங்களால் டிரம்புக்கு குடியரசு கட்சியின் பல்வேறு தலைவர்களுடன் சுமுக உறவு இல்லாத சூழல் நிலவுகிறது.

இந்நிலையில் தனியாகவே தேசபக்தர் என்ற பெயரில் ஒரு கட்சியை தொடங்க டிரம்ப் யோசித்து வருகிறார் என அவருக்கு நெருங்கிய வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுகுறித்து ஆதரவாளர்கள் மற்றும் நெருங்கிய வட்டாரங்களுடன் ஆலோசனையை அவர் மேற்கொண்டு வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவை பொறுத்தவரையில் இருகட்சி ஆட்சி முறையே தொடர்கிறது. ஜனநாயக கட்சி, குடியரசு கட்சி ஆகிய கட்சிகளே மாறி மாறி ஆட்சிப் பொறுப்புக்கு வருகின்றன. இந்நிலையில், மூன்றாவதாக ஒரு கட்சியை நிறுவுவது என்பது டிரம்புக்கு சவாலான பணியாகவே இருக்கும் என பார்க்கப்படுகிறது.

### வடக்கில்...

அவர் கூறுகையில், "வடக்கு மாகாணத்தில் கடந்த ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நேற்று வரை 351 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதில், வவுனியா மாவட்டத்தில் 234 பேருக்கும், மன்னாரில் 70 பேருக்கும் யாழ்ப்பாணத்தில் 32 பேருக்கும் கிளிநொச்சியில் பத்துப் பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எங்களுக்கு கடந்த வாரம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் கொரோனா தொற்று அபாயம் கூடிய பகுதியில் இருந்து அபாயம் குறைந்த பகுதிக்கு வருகை தருவோரை தமது அனுமதியின்றி தனிமைப்படுத்த வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் அங்கிருந்து வருபவர்களை தற்போது நாங்கள் தனிமைப்படுத்துவதில்லை. அப்படி கட்டாயமாக தனிமைப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்று தனிமைப்படுத்தும் நடவடிக்கையை எதிர்காலத்தில் மேற்கொள்வோம்.

அத்தோடு, தற்போது நாடு முழுவதும் இயல்பு வாழ்க்கையை மீளக் கொண்டுவருவதற்காக பல கட்டுப்பாடுகளுடன் தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பாடசாலைகள், சினிமா திரையரங்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் வடக்கு மாகாணத்திலுள்ள சந்தைகளை மீளவும் பழைய இடங்களில் இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், திருமண மண்டபங்களில் ஆகக்கூடியது 150 பேருடன் திருமண நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கியிருக்கின்றோம். மேலும் ரயில் சேவைகளும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

இப்படியான ஒரு சூழ்நிலையில், கொரோனா தொற்று அபாயம் அதிகமாக இருக்கும் பகுதிகளில் இருந்து வருபவர்களை தனிமைப்படுத்த வேண்டாம் எனும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப் படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமானது" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஓய்வூதிய சம்பளம் இல்லாமல் செய்யப்பட்டமைக்கு எதிரான எதிர்ப்பு மாநாடு!










2016.01.01 தொடக்கம் 2019.12.31 வரை ஓய்வூதியம் சென்ற 120000 இக்கு அதிகமான ஓய்வூதியதாரர்களுக்கு. 2020.01.01 தொடக்கம் வழங்கப்பட வேண்டிய ஓய்வூதிய கொடுப்பனவை தற்போதைய அரசாங்கம் நிறுத்தியமையால் கடந்த வருடம் முழுவதும் ஓய்வூதிய உரிமையை பாதுகாக்கும் தேசிய அமைப்பினால் இதற்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் அரசாங்கம் இக் கோரிக்கைகளுக்கு சாதகமான எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமையினால் இதற்கெதிராக தொழிற்சங்க தலைவர்களால் எதிர்ப்பு மாநாடு இன்று (2020/01/20) கொழும்பு விகாரமகாதேவி பூங்காவிற்கு முன்பாக நடைபெற்றது.

இவ் எதிர்ப்பு மாநாட்டில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜெயசிங்க உட்பட பல்வேறுபட்ட தொழிற்சங்கத் தலைவர்களும் ஓய்வூதிய காரர்களும் கலந்து கொண்டதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதித் தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

## ஓமந்தையில் 7 பவுண் தாலிக்கொடி அறுப்பு!

வவுனியா, ஓமந்தை, சேமமடு பகுதியில் பட்டப்பகலில் பெண் அணிந்திருந்த தாலிக்கொடியை அறுத்துச் சென்ற சம்பவம் ஒன்று நேற்று (19) இடம்பெற்றுள்ளது.

நேற்றையதினம் மதியம் வீட்டில் குறித்த பெண் இருந்த நிலையில் உள்ளே நுழைந்த திருடன் அவர் அணிந்திருந்த 7 பவுண் மதிப்பான தங்கத் தாலிக் கொடியைப் பறித்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளான்.

சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிசாருக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன், பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## அரிசி, மா, சீனி உள்ளிட்ட 10 அத்தியாவசிய பொருட்களுக்கு நிர்ணய விலை!



10 அத்தியாவசியப் பொருட்களுக்கு ஆறு மாதங்களுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த கட்டுப்பாட்டு விலை எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்கு நடைமுறையிலிருக்கும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கட்டுப்பாட்டு விலையின் பின்னர் அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கென விநியோகஸ்தர்களுக்கான விலைமனு கோரல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரிசி, மா, சீனி, பருப்பு, வெங்காயம், கடலை, நெத்தலி, ரின் மீன் உள்ளிட்ட 10 அத்தியாவசிய உணவுப்பொருட்களுக்கே கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த அத்தியாவசிய உணவுப் பொருட்களை நாடு முழுவதிலுமுள்ள சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஒரு மில்லியன் மக்களில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா!

இலங்கையின் மொத்த சனத்தொகையில் ஒரு மில்லியன் மக்களில் 2 ஆயிரத்து 465 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் பதிவாகுவதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேபோல, கொரோனா தொற்று காரணமாக மொத்த சனத்தொகையில் ஒரு மில்லியன் மக்களில் 12 பேர் உயிரிழக்கின்றனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலிய சனத்தொகையில் ஒரு மில்லியன் மக்களில் 1121 பேர் தொற்றாளர்களாக பதிவாகின்ற போதிலும் அந் நாட்டில் ஒரு மில்லியன் மக்களில் 93 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மரணிக்கின்றனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் இதுவரையான மொத்த கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 54 ஆயிரத்து 419 ஆகப் பதிவாகியுள்ளது. அவர்களில் 46 ஆயிரத்து 594 பேர் பூரண குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

மேலும், நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 273 ஆகப் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இராஜாங்க அமைச்சர் ஒருவரின் சாரதிக்கு கொரோனா!

இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரியவின் சாரதிக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கேகாலை பொது வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளான இராஜாங்க அமைச்சர் பியல் நிஸாந்த, அவரின் மனைவி மற்றும் மகள் ஆகியோர் கொக்கல பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்திற்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இராஜாங்க அமைச்சரின் இரண்டு மகன்கள், சாரதி, பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் செயலாளருக்கு கொரோனா தொற்று ஏற்படவில்லை என்பது மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அமைச்சருடன் நெருங்கிப் பழகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 22 பேருக்கு சுய தனிமைப்படுத்திக் கொள்ளுமாறு சுகாதார பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

## கொரோனா மரணம் 273 ஆக உயர்வு!

கொரோனா வைரஸ் தொற்றால் நாட்டில் மேலும் மூவர் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு 06, அரநாயக்க மற்றும் மாளிகாவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரு பெண்களும், ஆணொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அரநாயக்க பகுதியை சேர்ந்த 68 வயதான ஆண் ஒருவர் மாவனெல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அவருக்கு கொரோனா தொற்று உறுதியானமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து அநுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட அவர் கடந்த 18 ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது மரணத்திற்கான காரணம் கொரோனா நியுமோனியாவில் தீவிரமடைந்தமை சுவாசத் தொகுதி தொற்று என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கொழும்பு 6 பகுதியை சேர்ந்த 48 வயதுடைய பெண் ஒருவர் கொழும்பு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது கொரோனா தொற்று உறுதியானமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து நெவில் பெர்னாண்டோ மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட அவர் கடந்த 17 ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது, மரணத்திற்கான காரணம் கொரோனா தொற்றால் ஏற்பட்ட இதய நோய் நிலைமையாகும் என குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, மாளிகவாத்தை பகுதியை சேர்ந்த 70 வயதான பெண் ஒருவர் நெவில் பெர்னான்டோ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 14 ஆம் திகதி உயிரிழந்தார்.

கொரோனா தொற்றால் சுவாசப்பை செயலிழந்தமையே அவரது மரணத்திற்கான காரணம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்கள அறிக்கை தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொரோனா வைரஸ் தாக்கத்தால் இலங்கையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 273 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை நேற்று(செவ்வாய்கிழமை) மாத்திரம் 660 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.